[2007 ஏப்ரல் 16

64—

ஒலி–ஒளிக் காட்சி

***20902—திரு. என். மாலைராஜா:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி அருள்மிகு நெல்லையப்பர் திருக்கோயிலில் சுற்றுலாத் துறை சார்பாக நந்தவனத்தில் பூங்கா அமைக்கவும், ஆயிரம்கால் மண்டபத்தில் ஒலி–ஒளிக் காட்சி அமைக்கவும் அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அருள்மிகு நெல்லையப்பர் திருக்கோயில் சுற்றுலாத் துறையின் பராமரிப்பில் இல்லை. எனவே, அருள்மிகு நெல்லையப்பர் ஆலய வளாகத்தில் பூங்கா அமைக்கும் திட்டமும், ஒலி–ஒளிக் காட்சி அமைக்கும் திட்டமும் சுற்றுலாத் துறையின் பரிசீலனையில் தற்போது இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மாலைராஜா, இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ராஜன்.

திரு. அ. ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகர்கோவில் நகரில் சுப்பையார் குளம் என்ற ஒரு குளம் இருக்கிறது. கடந்த ஆட்சியில் சுற்றுலாத் துறையின் சார்பில் அங்கே படகு விடுவதாகச் சொல்லி அதற்காக நிதி ஒதுக்கி எந்தப் பணியும் செய்யாமல் அரைகுறையாக விட்டுச் சென்றுவிட்டார்கள். பல்லாயிரக்கணக்கான மக்கள் பயன்படுத்தக்கூடிய அந்தக் குளத்தில் தற்போது சுற்றுலாத் துறையின் சார்பாக அங்கே அந்தப் பணிகள் நடைபெறுவதாக நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களும் குறிப்பிட்டிருக்கிறார்கள். அது எந்த அளவில் இருக்கிறது? எப்பொழுது அந்தப் பணிகள் முடித்துத் தரப்படும் என்பதை மாண்புமிகு அமைச்சர்மூலம் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

2007 ஏப்ரல் 16]

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலத்தில் அந்தப் பணிகளை மேற்கொள்ள வேண்டுமென்று எண்ணி, அது நடைமுறைப்படுத்தப்படவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அங்கு மட்டுமல்ல, அனைத்துப் பகுதிகளிலும் கடந்த காலத்தில், முந்தைய அரசாங்கம் இதுபோன்ற நிதிகள் முறையாகப் பயன்படுத்தப்படவில்லை என்பதற்குச் சான்றாக, நெல்லை மாவட்டத்தின் பல்வேறு பணிகள் குறித்து அவர்கள் முறையாக மத்திய அரசாங்கத்திற்கு Utilisation Certificate கொடுக்காத காரணத்தால், நிதிகள் திருப்பி அனுப்பப்படக்கூடிய நிலைமை ஏற்பட்டது. அதுபோன்று இல்லாமல், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, அந்த சுப்பையார் குளத்தில் எதிர்பார்க்கக்கூடிய பணிகளை சுற்றுலாத் துறையின்மூலமாக நிச்சயமாக நிறைவேற்றித் தருவோம் என்று கூறிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சின்னசாமி.

திரு. அ. சின்னசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, பேரணாம்பட்டு தொகுதி, கைலாசகிரி ஊராட்சியிலுள்ள சுப்பிரமணியசாமி மலைக் கோயிலுக்கும், மிட்டாளம் ஊராட்சியிலுள்ள ஊட்லு பகுதியிலே இருக்கின்ற கோயில்களுக்கும் ஆயிரக்கணக்கான மக்கள் ஒவ்வொரு மாதமும் வந்து செல்கின்றார்கள். இந்த மக்களுடைய பயனைக் கருதி, இந்தப் பகுதியிலே பயணியர் விடுதியும், பூங்காக்களும் அமைக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பயணியர் விடுதியைப் பொறுத்தமட்டிலும், இந்தத் துறையின் சார்பாக புதிதாகக் கட்ட வேண்டுமென்ற குறிக்கோள் இல்லை. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஆர்வத்தைக் கருத்தில்கொண்டு, நம்முடைய முதலமைச்சர் கலைஞர் அவர்களிடத்திலே கேட்டு நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம்.

திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாமல்லபுரத்திலே ஒலி—ஒளிக் காட்சி அமைக்கப்படும் என அரசு அறிவித்து பல ஆண்டுகளாகி இருக்கிறது. இதுவரையிலே அது ஆரம்பிக்கப்படவில்லை. இந்த ஆண்டு நம்முடைய சுற்றுலாத் துறை, ஒலி—ஒளிக் காட்சி அமைக்க முன்வருமா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாமல்லபுரத்திலுள்ள புராதன நினைவுச் சின்னங்களைப் பார்க்க வரும் சுற்றுலாப் பயணிகள் அவற்றின் வரலாற்றுச் சிறப்புகளைச் சரியாக அறிந்துகொள்ளும் வகையில் பதிவு செய்து ஒலிபரப்பப்படும் ஒலி வழிகாட்டி (Audio Guide) வசதியை எல்காட் நிறுவனம்மூலம் அமைக்க சுற்றுலாத் துறையால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரியப்படுத்திக்கொள்கிறேன்.

முற்பகல் 9—55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 65, மாண்புமிகு உறுப்பினர் திரு. த.அ. மேகநாதன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

65—

ஆரம்ப சுகாதார நிலையம்

***5854—திரு. த.அ. மேகநாதன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவேரிப்பட்டினம் தொகுதி, நாகரசம்பட்டி கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரி ஊராட்சி ஒன்றியத்தில் நாகரசம்பட்டி கிராமத்தில் ஏற்கெனவே ஒரு